# INTERNATIONAL INDIAN SCHOOL, BURAIDAH
# Worksheet 2 for the academic year(2025-2026)
**Grade : 4**
**Subject: Tamil ( தமிழ் )**

**I)** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………
அ) பல் + லாண்டு ஆ) பல் + ஆண்டு இ) பல + ஆண்டு ஈ) பல + யாண்டு

2) செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………
அ) செய + லாக்கம் ஆ) செயல் + ஆக்கம் இ) செயலா + க்கம் ஈ) செயல் + லாக்கம்

3) இப்போது + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்……………………
அ) இப்போதெல்லாம் ஆ) இப்போது எல்லாம் இ) இப்போல்லாம் ஈ) இப்போ யெல்லாம்

4) பேசி +இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………………………
அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு இ) பேசி இருந்தால் ஈ) பேசவிருந்தால்

5) வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்……………………
அ) வந்து இருந்தது ஆ) வந்திஇருந்தது இ) வந்திருந்தது ஈ) வந்தியிருந்தது

6) தெள்ளிய – இச்சொல்லின் பொருள்
அ) மெல்லி ஆ) இளகிய இ) முதிர்ந்த ஈ) அழகிய

7) ஆல் இச்சொல்லின் பொருள் ……
அ) வேல மரம் ஆ) ஆல மரம் இ) அரச மரம் ஈ) வேப்ப மரம்

8) கயம் இச்சொல்லின் பொருள் ….
அ) நீர் நிலை ஆ) பயம் இ) வானிலை ஈ) பருவநிலை

9) புரவி இச்சொல்லின் பொருள் ……………
அ) யானை ஆ) பூனை இ) ஆள் ஈ) குதிரை

10) பெரும்படை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………
அ) பெருமை + படை ஆ) பெரும் + படை இ) பெரு + படை ஈ) பெரிய + படை

11) நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………
அ) நிழல் ஆகும் ஆ) நிழலாகும் இ) நிழல்லாகும் ஈ) நிழலாஆகும்

12) சாலையெங்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………..
அ) சாலை + யெங்கும் ஆ) சாலை + எங்கும் இ) சால + எங்கும் ஈ) சால + யெங்கும்

13) சுண்டியிழுக்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ………………………..
அ) சுண்டி + யிழுக்கும் ஆ) சுண் + டியிழுக்கும் இ) சுண்டு + இழுக்கும் ஈ) சுண்டி + இழுக்கும்

14) ஓடி + ஆடி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………………………
அ) ஓடிஆடி ஆ) ஓடியோடி இ) ஓடியாடி ஈ) ஓடியாடி

15) காலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………
அ) காலை பொழுது ஆ) கால்பொழுது இ) காலைப்பொழுது
ஈ) காலப்பொழுது

16) வரகு + அரிசி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………..
அ) வரகரிசி ஆ) வரகு அரிசி இ) வரக்கரிசி. ஈ) வரகுகரிசி

17) உணவு + அளிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………
அ) உணவு அளிக்க ஆ) உணவளிக்க இ) உணவுவளிக்க ஈ) உணவ்வளிக்க

18) பெருவெள்ளம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………
அ) பெருமை + வெள்ளம் ஆ) பெரு + வெள்ளம் இ) பெரு + வுள்ளம் ஈ) பெரிய + வெள்ளம்

19) தங்கியிருந்த இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………………
அ) தங்கி + இருந்த ஆ) தங்கி + யிருந்த இ) தங்கியி + ருந்த ஈ) தங்கு + இருந்த

20) அமைந்துள்ளது இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………………
அ) அமைந் + துள்ளது ஆ) அமைந்து + உள்ளது இ) அமைந்து + ள்ளது ஈ) அமைந் + உள்ளது

21) அரசு + ஆட்சி என்பதைச் சேர்த்து கிடைக்கும் சொல் ……………………………
அ) அரசஆட்சி ஆ) அரசாட்சி இ) அரசுசாட்சி ஈ) அரசு ஆட்சி

22) நீர் + பாசனம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………………
அ) நீர்பாசனம் ஆ) நீர்ப்பாசனம் இ) நீரப்பசனம் ஈ) நீர்பாசனம்

23) மேலே இச்சொல்லின் எதிர்ச்சொல்.....................
அ) கீழே ஆ) அருகில் இ) தொலைவில் ஈ) வளைவில்

24) ‘இன்சொல்’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) இன் + சொல் ஆ) இனிமை + சொல் இ) இன்மை + சொல் ஈ) இனிய + சொல்

25) ‘அதிர்கின்ற வளை’ – இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள்...............
அ) உடைகின்ற ஆ) ஒலிக்கின்ற இ) ஒளிர்கின்ற ஈ) வளைகின்ற Answer: ஆ) ஒலிக்கின்ற

26) வியனுலகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………….
அ) வியன் + உலகம் ஆ) வியல் + உலகம். இ) விய + உலகம் ஈ) வியன் + னுலகம்

27) கல்லணை அமைந்துள்ள மாவட்டம் …… தஞ்சாவூர்(திருச்சி/ தஞ்சாவூர்)

28) தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு ……… கொள்ளிடம் (வைகை / கொள்ளிடம்)

29) கல்லணையைக் கட்டிய அரசன் …………கரிகாலன்(கரிகாலன்/இராசராசன்)

30) கல்லணை ……பழந்தமிழர் தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.
(பழந்தமிழர்/இன்றைய)

II) எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவு செய்க:

1. பருவ மழை பெய்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவர், பெய்யாவிட்டால் __________ அடைவர்.
2. எப்பொழுதும் உண்மை பேச வேண்டும், __________ பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
3. தோல்வி என்பது முடிவு அல்ல வெற்றியின் _________.
4. கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை. கரும்பலகை மூலம் கல்வி கற்றது ________ முறை.
5. பிறருக்குக் கொடுத்து உதவுவது உயர்ந்த குணம். பிறர் பொருளைத் திருடுவது ________ குணம்.
6. மருத்துவமனைகளில் சத்தமாகப் பேசாமல் _________ பேச வேண்டும்.

III) குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க. (ஊர், நார், பார், போர், வேர், தேர், நீர், மோர்)

1. உலகம் என்பதன் வேறு சொல் __________

2. திருவிழா என்றாலே இது இருக்கும் _______

3. மக்கள் சேர்ந்து வாழுமிடம் __________

4. இது இல்லாமல் உயிர்கள் இல்லை __________

5. நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் _________

6. மரம், செடி, கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவுவது ___________

7. மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுப்படுத்த அண்டை நாடுகளோடு தொடுப்பது _________

8. பூத்தொடுக்க உதவுவது __________

IV) சரியா தவறா?

1. புலி, முயலின் முன்னோரைக் கொன்று தின்றுவிட்டது.

2. முயல் புலிக்குக் கரும்பு கொடுத்தது.

3. விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது.
4. முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது.
5. முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது.

V) பொருத்தமான நிறுத்தக்குறி இடுக:

1. ஆகா என்ன சுகம் தெரியுமா
2. என்னைக் கட்டிப் போடுகிறார்கள்
3. ஆகா இது என்ன பிரமாதம்
4. நான் என்ன வேலை செய்ய வேண்டும்
5. காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி கத்தாரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்

VI) சொல் ஒன்று, பொருள் இரண்டு – கண்டுபிடிக:

1) வயலில் மேய்வது ________

அழகாய் நடனம் ________

2) மாதத்தின் மறுபெயர் _______

நிலவைக் குறிப்பது _______

3) வகுப்பில் பாடம் ________

மாடி செல்ல உதவும் _________

4) வளைந்து ஓடுவது _________

இந்த எண்ணின் பெயர் ________

5) பூக்களைத் தொடுதால் _________

அந்தி சாயும் பொழுது ________

6) சோற்றின் மறுபெயர் ________

அழகிய பறவை _________

VII) இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை நிரப்புக:

1. பருவ மழை பெய்தது. ஏரி, குளங்கள் நிரம்பின.(அதனால்)

2. காற்று பலமாக வீசியது. மரங்கள் வேரோடு சாய்ந்தன.(ஆகவே)

3. அப்பா விரைவாக வந்துவிடுகிறேன் என்றார். வரவில்லை. (ஆனால்)

4. பூக்கள் அழகாகப் பூத்திருந்தன. பறிக்க மனமில்லை.(எனினும்)

5. நான் தாய் நாட்டிலேயே பணிபுரிய விரும்புகிறேன். வெளிநாடு செல்ல மாட்டேன். (ஆகையால்)

6. தினமும் காலையில் எழுந்து நன்றாகப் படித்தேன். நான் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றேன்.(எனவே)

VIII) பொருளைப் பொருத்துக:

1) வேளை - இளம் இலை
2) பொதி - பக்க அடுப்பு
3) ஆயத்தப்படுத்துதல் - நேரம்
4) துளிர் - தயார் செய்தல்
5) கொடியடுப்பு - மூட்டை
6) புதுமை - தொலைவில்
7) சிறிய - எதிரிகள்
8) அருகில் - பழைமை
9) நண்பர்கள் - அடித்தளம்
10) மேல்தளம் - பெரிய
11) இன்சொல் – கதிரவனின் ஒளி
12) வன்சொல் – நிலவின் ஒளி
13) அழல்கதிர் – கடுஞ்சொல்
14) தண்ணென் கதிர் – இனிய சொல்

IX) மொழிபெயர்ப்பு:

1) Stove 2. Village 3. Morning

4. Food 5. Cowdung 6. Field

7. District 8. Dam 9. Distance

10. Fire accident 11. Irrigation

X) திருக்குறள் “செய்யாமல்” என தொடங்கும் குறள்.

XI) வினா விடை:

1) கரிகாலனின் இயற்பெயர் என்ன?
2) கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?
3) காவிரி ஆறு எந்தெந்த ஆறுகளாகப் பிரிகிறது?
4) கல்லணை பயன்பெறும் மாவட்டங்கள் யாவை?
5) கல்லணை எங்கு உள்ளது?
6) அழகிய மலைக் கிராமத்தின் பெயர் என்ன?
7) பிள்ளைகள் காலை உணவாக என்ன உண்டார்கள்?
8) அம்மாவின் பொட்டு எதைப் போல் இருந்தது?
9) அறிவுமதி எப்பாத்திரத்தில் சமைத்தாள்?
10) பிள்ளைகள் எதில் அமர்ந்து உணவு உண்டனர்?
11) இணைப்புச் சொற்கள் என்றால் என்ன?
12) சில இணைப்புச் சொற்ளை கூறுக?
13) ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்?
14) ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?
15) இப்பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?
16) முயலின் கவலைக்குக் காரணம் என்ன?
17) விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?
18) முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூறியது?
19) புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய கட்டுப்பாடு என்ன?
20) விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?
21) உலகம் எப்போது மகிழும்? – நன்னெறிப் பாடல் மூலம் உணர்த்துக.
22) கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?